✆ 0431 - 2461415

# திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்

2, மேஜர் சரவணன் ரோடு, திருச்சி - 620 001

*www.trichyayyappan.com*

சுவாமி சரணம் !

அன்புடையீர்,

நம்முடைய சங்க வளாகத்தில் அருள் பாலிக்கும் பகவான் **ஸ்ரீ ஐயப்பனுக்கு 41வது மண்டல பூஜை நிகழ்ச்சிகள்** வழக்கம்போல் சிறப்பாக நடைபெற உள்ளன.

1. **மண்டல பூஜை விழா** 17.11.2025 முதல் 27.12.2025 வரை

ஸ்ரீ விசுவாவசு வருடம் கார்த்திகை 1 முதல் மார்கழி 12 வரை

## பூஜை நேரங்கள்

| காலை | | மாலை | |
|---|---|---|---|
| 05.00 | நடை திறத்தல் | 5.00 | நடை திறத்தல் |
| 05.30 | கணபதி ஹோமம் | 5.30 - 6.00 | கற்பூர ஆழி<br>ஐயப்பன்மார் கூட்டு வழிபாடு |
| 06.30 | அபிஷேகம் | 6.00 - 6.30 | மாலை பூஜை, தீபாராதனை |
| 07.30 | உஷத் பூஜை, சீவேலி | 6.30 - 8.00 | கலை நிகழ்ச்சிகள் &<br>உபந்நியாசம் |
| 10.15 | கோமாதா பூஜை | 8.00 - 8.40 | இரவு பூஜை, சீவேலி |
| 10.30 | உச்சகால பூஜை | | ரதபவனி, ஹரிவராசனம் |
| 11.00 | நடை சாத்துதல் | | நடை சாத்துதல் |

ஐயப்பன் ஆலயத்தில் அனைவரும் சமமே!

## 2. பிரம்மோத்ஸவ நிகழ்ச்சிகள் (12.12.25 - 17.12.25)

பகவான் ஸ்ரீ ஐயப்பனுக்கு பிரம்மோத்ஸவ பூஜை வழிபாடுகள் 12.12.2025 அன்று ஆரம்பித்து 17.12.2025 அன்று நிறைவு பெறுகின்றன.

12.12.2025 மதியம் **மகா அன்னதானமும்,** அன்று மாலை கொடியேற்றமும் நடைபெறும். 14.12.2025 காலை 108 வலம்புரிச் சங்காபிஷேகமும், 15.12.2025 காலை உற்சவ பலி பூஜையும், 16.12.2025 இரவு பள்ளிவேட்டையும், 17.12.2025 மாலை 4.00 மணிக்கு முருங்கப்பேட்டை அடைக்கலம் காத்த அம்மன் படித்துறையில் ஆராட்டும், பின்னர் 6.30 மணியளவில் கொடியிறக்கமும் நடைபெறும். இந்த பிரம்மோத்ஸவ நிகழ்ச்சிகளை **சபரிமலை பிரதான தந்திரி கண்டரு மோகனரு** அவர்கள் நடத்தித்தர இசைந்துள்ளார்கள்.

## 3. ஆன்மிகச் சொற்பொழிவுகள் :

பிரம்மோத்ஸவ நாட்கள் தவிர இதர நாட்களில் ஆன்மிகத் தொடர் சொற்பொழிவுகள், ஐயப்பன் பஜன் போன்றவைகள் நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு தினசரி இரவு 6.30 மணிமுதல் 8.00 மணிவரை நடைபெறும்.

| தேதி | பெயர் | தலைப்பு |
|---|---|---|
| 17.11.2025 | திரு. N. திருஞானம் குழுவினர் | நாதஸ்வர இன்னிசை |
| 18.11.2025 | Dr. மகேஷ் காஷ்யப் | இன்னிசை நிகழ்ச்சி |
| 19.11.2025 | திரு. திருச்சி ரமேஷ் | இன்னிசை நிகழ்ச்சி |
| 20.11.2025 | திரு. தாமோதர தீட்சிதர் | உபந்நியாசம் – மச்சாவதாரம் |
| 21.11.2025 | திரு. தாமோதர தீட்சிதர் | உபந்நியாசம் – கூர்மாவதாரம் |
| 22.11.2025 | திரு. தாமோதர தீட்சிதர் | உபந்நியாசம் – வராக அவதாரம் |
| 23.11.2025 | திரு. தாமோதர தீட்சிதர் | உபந்நியாசம் – நரசிம்ம அவதாரம் |
| 24.11.2025 | திரு. தாமோதர தீட்சிதர் | உபந்நியாசம் – வாமன அவதாரம் |
| 25.11.2025 | திரு. தாமோதர தீட்சிதர் | உபந்நியாசம் – பரசுராமர் அவதாரம் |
| 26.11.2025 | திரு. தாமோதர தீட்சிதர் | உபந்நியாசம் – இராமர் அவதாரம் |
| 27.11.2025 | திரு. தாமோதர தீட்சிதர் | உபந்நியாசம் – பலராம அவதாரம் |
| 28.11.2025 | திரு. தாமோதர தீட்சிதர் | உபந்நியாசம்–கிருஷ்ணர் அவதாரம் |

| | | |
|---|---|---|
| 29.11.2025 | திரு. தாமோதர தீட்சிதர் | உபந்நியாசம் – பாரத சம்பிரதாயங்கள் |
| 30.11.2025 | தேவார இசைமணி<br>திரு. சுந்தரவடிவேல் ஓதுவார் | தேவாரம் இன்னிசை |
| 01.12.2025 | குஞ்சிதபாதம் குருசாமிகள் குழுவினர் | ஐயப்ப பஜன் |
| 02.12.2025 | பக்தர்கள் | லட்சார்ச்சனை |
| 03.12.2025 | சேவையாளர்கள் | ஐயப்ப பஜன் |
| 04.12.2025 | இரவு – மகாலட்சுமி பூஜை | |
| 05.12.2025 | திரு. P. சுவாமிநாதன் | சொற்பொழிவு – கர்மா |
| 06.12.2025 | திரு. P. சுவாமிநாதன் | சொற்பொழிவு – பக்தி |
| 07.12.2025 | திரு. P. சுவாமிநாதன் | சொற்பொழிவு – சரணாகதி |
| 08.12.2025 | திரு. P. சுவாமிநாதன் | சொற்பொழிவு – அன்பே சிவம் |
| 09.12.2025 | திரு. P. சுவாமிநாதன் | சொற்பொழிவு – குருவே சரணம் |
| 10.12.2025 | பாலர் பள்ளி குழந்தைகள் | பஜன் |
| 11.12.2025 | திரு. கிரிஷ் குழுவினர் | வாத்திய விருந்து |
| 12.12.2025 | **உத்திரம் –<br>பிரம்மோத்ஸவம் ஆரம்பம்** | மதியம் – மகா அன்னதானம்<br>மாலை – கொடியேற்றம் |
| 13.12.2025 | **பிரம்மோத்ஸவம்** | இரவு – 108 வலம்புரிச்<br>சங்காபிஷேகம் பூர்வாங்க பூஜை |
| 14.12.2025 | **பிரம்மோத்ஸவம்** | காலை வலம்புரிச் சங்காபிஷேகம் |
| 15.12.2025 | **பிரம்மோத்ஸவம்** | உற்சவ பலி பூஜை |
| 16.12.2025 | **பிரம்மோத்ஸவம்** | இரவு 8.00 மணியளவில்<br>பள்ளி வேட்டை |
| 17.12.2025 | **பிரம்மோத்ஸவம் நிறைவு** | மாலை 4.00 மணிக்கு<br>காவிரியில், முருங்கப்பேட்டை<br>அடைக்கலம் காத்த அம்மன்<br>படித்துறையில் ஆராட்டு.<br>மாலை 6.30 மணியளவில்<br>கொடியிறக்கம் |

| | | |
|---|---|---|
| 18.12.2025 | திருமதி. மீனாட்சி வெள்ளையன் | வீணை |
| 19.12.2025 | | கலை நிகழ்ச்சி |
| 20.12.2025 | திருமதி. B. பிரியா முரளிதரன் | இன்னிசை |
| 21.12.2025 | Dr. இராமகிருஷ்ண ஈஸ்வரன் | சுந்தரகாண்டம் தரும் பாடங்கள் |
| 22.12.2025 | திரு. முரளி கிருஷ்ணா | பஜன் |
| 23.12.2025 | குமாரி காத்யாயினி | கிருஷ்ணலீலா ஹரிகதா |
| 24.12.2025 | பேபி ஆராதனா | ஐயப்பன் ஹரிகதா |
| 25.12.2025 | ஸ்மரணே சுகம் | நாம சங்கீர்த்தனம் |
| 26.12.2025 | திரு. சுரேஷ் குழுவினர் | கைலாய வாத்தியம் இசை |
| 27.12.2025 | சேவையாளர்கள் | மண்டலாபிஷேகம், புஷ்பாபிஷேகம், ரதபவனி |

## 4. மகா அன்னதானம்

கார்த்திகை மாத உத்திரம் 12.12.2025 அன்று மதியம் மகா அன்னதானம் நடைபெறும். அன்பர்கள் பெருமளவில் அன்னதானத்தில் பங்கேற்க வேண்டுகின்றோம்.

## 5. மண்டல பூஜை பிரசாத விநியோகம்

மண்டல பூஜை நாட்களில் 17.11.2025 முதல் 27.12.2025 வரை தினசரி கோயிலுக்கு வரும் அன்பர்களுக்கு காலை 7.00 மணியளவில் பிரசாத விநியோகமும், மாலை 5.00 மணியளவில் கஞ்சி பிரசாதமும் சராசரி சுமார் ரூ. 22,000/- செலவில் விநியோகிக்கப்பட உள்ளது. விருப்பமுள்ள அன்பர்களும், தனியாக வீட்டில் அன்னதானம் செய்ய இயலாதவர்களும் இந்த அன்னதானத்தில் பங்குபெற அழைக்கின்றோம்.

## 6. வலம்புரிச் சங்காபிஷேகம்

1. 14.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் வலம்புரிச் சங்காபிஷேகம் நடைபெறும். அபிஷேகம் ஆன பிறகு இந்தச் சங்குகளை அன்பர்கள் ரூ. 1,700/- கொடுத்து அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2. ஐயப்பனுக்கு பூஜை செய்த வலம்புரிச் சங்குகளை வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ வைத்திருப்பது மிகவும் விஷேசம். திருமணத் தம்பதிகளுக்கு **பரிசாகக் கொடுக்கலாம்.** புதியதாய் வீடு கட்டி கிரஹப் பிரவேசம் செய்பவர்களுக்கும் **பரிசாக கொடுக்கலாம்.**

## 7. விசேஷ ஹோமங்கள்

அன்பர்களின் எல்லாவிதமான நலன்களுக்காக கீழ்க்கண்ட ஹோமங்கள் **ஸ்ரீ தாமோதர தீட்சிதர்** அவர்களால் 22.11.2025 முதல் 29.11.2025 வரை நடத்தப்பட உள்ளன.

ஹோம நேரம் : **காலை 7.00 மணி முதல் 10.45 மணி வரை**

| நாள் | தேதி | ஹோமம் |
|---|---|---|
| 1 | 22.11.2025 சனி | ஸ்ரீ வித்யா கணபதி ஹோமம், ஸ்ரீ தாரணா சரஸ்வதி ஹோமம், ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி ஹோமம். ஆவஹந்தி ஹோமம் |
| 2 | 23.11.2025 ஞாயிறு | ஸ்ரீ கல்யாண ஹரித்ரா கணபதி ஹோமம் ஸ்ரீ ஸ்வயம்வரா கலா பார்வதி ஹோமம் |
| 3 | 24.11.2025 திங்கள் | ஸ்ரீ பூவராக, ஸ்ரீ பாக்ய சூக்த, ஸ்ரீ துர்க்கா சூக்த, ஸ்ரீ சூக்த ஸம்புடித விக்ன நிவாரண அஷ்ட திரவிய மஹா கணபதி ஹோமம். |
| 4 | 25.11.2025 செவ்வாய் | ஸந்தான கோபால ஹோமம், ஸந்தான பரமேஸ்வர ஹோமம், மஹா நவக்கிரஹ சாந்தி ஹோமம் |
| 5 | 26.11.2025 புதன் | மஹா சுதர்ஸன ஹோமம் |
| 6 | 27.11.2025 வியாழன் | ஸ்ரீ தன்வந்தரி ஹோமம், ஸ்ரீ மிருத்யுலாங்கள, மஹா ம்ருத்யுஞ்ஜய ஹோமம் |
| 7 | 28.11.2025 வெள்ளி | ஸத்ரு ஸம்ஹார நரசிம்ம ஹோமம், ஸுப்ரமண்ய திரிசதி ஹோமம், ருண விமோச்சன ஹோமம். |
| 8 | 29.11.2025 சனி | ஸ்ரீ குபேர லக்ஷ்மி, ஸ்ரீ மஹா லக்ஷ்மி மந்திர ஸம்புடித, ஸ்ரீ புவனேஸ்வரி மஹா மந்திர ஜப ஹோமம். |

விரும்பும் அன்பர்கள் ஒரு ஹோமத்திற்கு ஒரு நபருக்கு ரூ. **600/-**ஐ செலுத்தி தங்களது பெயரையும், நட்சத்திரத்தையும் கூறி பதிவு செய்து கொள்ளலாம். ஹோமத்தில் நேரில் கலந்து கொண்டு ரசீதை காண்பித்து பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம்.

## 8. ரதபவனி

தாங்கள் விரும்பும் நாட்களில் (பிரம்மோத்ஸவ நாட்கள் தவிர) ரூ. 2000/- செலுத்தி ரதம் இழுக்க முன்பதிவு செய்து கொள்ளலாம். நாள் ஒன்றுக்கு ஒரு உபயதாரர் மட்டுமே. ரதம் இழுக்க 8 நபர்கள் மட்டுமே. (ஆண்கள் 4 + பெண்கள் 4)

ஆண்கள் வேட்டி, துண்டு அணிந்தும், பெண்கள் பாரம்பரிய உடை சேலை, தாவணி அணிந்து வரவும்.

சுடிதார் அணிந்து கலந்து கொள்ள இயலாது.

## 9. மாலை போடுவதற்கான வழிகாட்டல்

* 41 நாட்கள் விரதம் இருப்பவர்கள் மட்டுமே இங்கு கோவில் குருசாமிகள் மூலம் மாலை அணிந்து கொள்ளலாம். (தனிப்பட்ட முறையில் வேறு குருசாமிகள் மாலை அணிவிக்க அனுமதி இல்லை).
* மாலை போட தட்சணை இல்லை.
* ஒரு மாலை மட்டுமே அணிவிக்கப்படும். விரதத்தை முறையாக கடைபிடிக்கும் போது துணை மாலை அவசியமே இல்லை.
* மாலை அணிவிக்க பொதுவான நேரம் : காலை : 06.00 - 08.30, மாலை : 05.00 - 07.30
* மாலை போட நிறைவு நாள் : 05.12.2025
* இங்கு மாலை கழற்ற இயலாது.

குறிப்பு :

1. இங்கு உண்டியல் கிடையாது.
2. நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.
3. சிப்பந்திகளுக்கு எவ்விதமான சன்மானமும் கொடுக்க வேண்டாமே!
4. வெள்ளி, தங்கம் வாங்க இயலாது.

## 10. அன்பர்களுக்கான பூஜை விபரங்கள் & கட்டணங்கள்

| வ. எண். | நேரம் | விபரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | --- | முழுநாள் பூஜை | 2,000 |
| 2 | 5.30 AM | கணபதி ஹோமம் | 300 |
| 3 | 6.30 AM | அபிஷேகம் | 1,200 |
| 4 | 9.30 AM | அன்னம் ஊட்டல் (சக்தி விநாயகர் சந்நிதியில்) | 200 |
| 5 | 10.15 AM | கோமாதா பூஜை | 380 |
| 6 | 10.30 AM | ராகுகால பூஜை (அம்மன் - வெள்ளி மட்டும்) | 700 |
| 7 | 7.00 PM | பகவதி பூஜை (வெள்ளி மட்டும்) | 700 |
| 8 | 6.00 PM | நீராஞ்சனம் (சனி மட்டும்) | 100 |
| 9 | 8.30 AM | நவக்கிரக ஹோமம் & அபிஷேகம் (சனி மட்டும்) | 1,500 |
| 10 | 8.30 AM | நவக்கிரக அர்ச்சனை - 9 வாரங்களுக்கு<br>தபால் - உள்நாடு<br>தபால் - வெளிநாடு | <br>500<br>1,000 |
| 11 | 7.00 PM | புஷ்பாபிஷேகம் (விரும்பும் தினத்தில்) | 5,000 |
| 12 | 8.15 PM | ரதபவனி (விரும்பும் தினத்தில்) பிரம்மோத்ஸவ நாட்கள் தவிர | 2,000 |
| 13 | 8.15 AM | நாகராஜா பூஜை (ஆயில்யம்) | 700 |
| 14 | 7.00 PM | மகாலட்சுமி பூஜை (பௌர்ணமி) | 700 |
| 15 | | நட்சத்திர அர்ச்சனை- ஒரு வருடத்திற்கு<br>தபால் - உள்நாடு<br>தபால் - வெளிநாடு | <br>600<br>1,200 |
| 16 | 5.00 PM | அனைத்து சந்நிதானங்களுக்கும் (இரவு)<br>வெள்ளிக்கவசம் சாத்துவதற்கு (விரும்பும் தினத்தில்) | 1,000 |
| 17 | 6.30 PM | சங்கடஹர சதுர்த்தி | 300 |
| 18 | | அனைத்து சந்நிதானங்களுக்கும் பூமாலை | 1,800 |
| 19 | | 18 நெய் தீபம் | 330 |
| 20 | | 54 நெய் தீபம் | 1000 |
| 21 | | 108 நெய் தீபம் | 2000 |
| 22 | | ஐயப்பனுக்கு பூஜை செய்த வலம்புரி சங்கு | 1700 |

## Bank Account Details :

| | | |
|---|---|---|
| Name | : | Tiruchirappalli Sri Ayyappa Sangam |
| Bank | : | City Union Bank, Cantonment |
| S.B. Account No. | : | 500101010892683; IFSC : CIUB0000153 |
| Branch | : | Tiruchirappalli - 620 001. |

: QR CODE - ஐ பயன்படுத்தி தொகையை செலுத்தி Whats App - 94448 61415 ல் விபரங்களை தெரிவிக்கலாமே!

### 11. வேண்டுகோள்

அன்பர்கள் அனைவரும் சங்க விதிமுறைகளையும், நடைமுறைகளையும், நன்முறையில் பின்பற்றி அமைதியையும், ஆலயத்தூய்மையையும் செவ்வனே கடைப்பிடித்து பூஜை வழிபாடுகளிலும், மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு பகவானின் திருவருளைப் பெற வேண்டுகிறோம்.

சுவாமி சரணம்.

திருச்சிராப்பள்ளி -1, **ஸ்ரீ ஐயப்ப சங்கத்தினர்**

---

குறிப்பு :

- ★ நடை திறந்திருக்கும் சமயத்தில் ( 5.00 - 11.00 A.M. & 5.00 - 8.40 P.M.) மட்டுமே அன்பர்கள் சங்க வளாகத்திற்குள் அனுமதிக்கப்படுவர்.
- ★ பிரம்மோத்ஸவ நாட்களில் பூஜை நேரங்கள் மாறுபடும்.
- ★ இங்கு உண்டியல், தட்டுக்காசு, தட்சணை கிடையாது.
- ★ CELL PHONE IS BANNED IN THIS PREMISES, PLEASE NOTE.
- ★ PROPER DRESS CODE IS ESSENTIAL.
- ★ MAINTAI]N ABSOLUTE SILENCE.
- ★ நமது கோவிலில் உள்ள கல்வெட்டுகளில் அமைந்துள்ள வாசகங்கள் ***www.trichyayyappan.com*** என்ற website-லிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.